
# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 19.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com


# மரணவீட்டில் கலந்து கொண்ட 24 பேருக்கு கொரோனா

## வாழைச்சேனையில் சம்பவம்

**(வேதாந்தி)**

மட்டக்களப்பு வாழைச்சேனை சுகாதாரப்பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் மருதநகரில் இடம்பெற்ற மரணவீடொன்றில் கலந்துகொண்ட 24பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார வைத்தியஅதிகாரி டாக்டர்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இன்று முதல் முடக்க தீர்மானம்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாவின் மூன்றாவது அலையின் பின்னர் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்படுவதனைத் தொடர்ந்து விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட கொவிட் தடுப்பு செயலணியின் விசேட கூட்டம்

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் 24 மணி நேரத்தில் 5 பேர் மரணம்; 50 தோற்றாளர்கள்

**(ஹஸ்பர் ஏ ஹலீம், கதிரவன்)**

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 05 மரணங்கள் கொவிட்19 காரணமாக பதிவாகியுள்ளதாகவும் புதிய தொற்றாளர்களாக 50 இனங்காணப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சேவைகள் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 ஆம் பக்கத்தில்...

## மன்னார் ஆலயங்களில் சோக மணியோசை ஒலிக்கவைத்து முள்ளிவாய்க்காள் நினைவஞ்சலி

**(வாஸ் கூஞ்ஞ)**

ஆலயங்களில் சோக மணியோசையை ஒலிக்கவைத்து ஈகைச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தி சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து வீடுகளிலே இருந்துகொண்டு இறந்தவர்களின் ஆன்மாக்களுக்காக இறைவேண்டி மன்னார் மறைமாவட்டத்தின் சகல

02 ஆம் பக்கத்தில்...

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## கல்குடா கடற்கரையில் 10 பேர் கைது

**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் ஈடுபட்டிருந்த 10 பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கிழ் கைதுசெய்து செய்யப்பட்டுள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. துரைரட்ணசிங்கம் காலமானார்

**(பொன்ஆனந்தம்)**



திருகோணமலை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்காமத்தம்பி துரைரட்ணசிங்கம் திங்கட் கிழமை நள்ளிரவு காலமானார்.

இவர் கொரோனா நோய் தொற்று காரணமாக கந்தளாய் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் காலமானார்.

மூதூர் பிரதேசத்தில் கல்வி வளர்ச்சியில் பங்காற்றிய முக்கிய கல்விமானும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான இவர் பல முறை பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

முழு விபரங்கள் 6 ஆம் பக்கத்தில்...

## மக்களின் மருத்துவ தேவைகளை எடுத்துக்கூறினால் நான் இனவாதியா?

### சாணக்கியன் கேள்வி



**(காந்தன்)**

மக்களின் மருத்துவ தேவைகளை எடுத்துக்கூறினால் நான் இனவாதியா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

02 ஆம் பக்கத்தில்...

## 'காட்டுச் சட்டத்தின் மூலம் குற்றமிழைக்காமல் அடைத்து வைக்கப்பட்டுள்ளேன்'



எந்தவிதமான குற்றமும் இழைக்காத தன்னை, பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்து, தொடர்ந்தும் காரணமின்றி தடுத்து வைத்திருப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட்

02 ஆம் பக்கத்தில்...

## சுகாதார வழிமுறைகளை மீறிய கடைகளுக்கு பூட்டு

### 4 கடைகளுக்கு எதிராக வழக்கு தாக்கல்



**(நூருள் ஹுதா உமர்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் உத்தரவின் பேரில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அலுவலக சுகாதார

02 ஆம் பக்கத்தில்...

## நாடாளுமன்றில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிப்பு



**(சந்திரன் குமணன்)**

12ஆவது ஆண்டு முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நினைவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.















# 'காட்டுச் சட்டத்தின் மூலம் குற்றமிழைக்காமல் அடைத்து வைக்கப்பட்டுள்ளேன்'

பதியுதீன் தெரிவித்தார். குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு, கடந்த 25 நாட்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ரிஷாட் பதியுதீன் எம்.பி நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்கு அழைத்து வரப்பட்டார்.

இதன்போது சபையில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா இந்த நாட்டிலும் உலகத்திலும் அதிகரித்து வரும் நிலையில், நமது நாட்டிலும் மரண எண்ணிக்கை கூடி வருகின்றது. அரசாங்கம் தமது கடமையை சரியாகச் செய்து, நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும் என முதலில் வேண்டுகோள் விடுக்கின்றேன். இன்று என்னை பாராளுமன்றத்துக்கு அழைத்து வருவார்களா? இல்லையா? என்பது கூட எனக்கு சந்தேகமாக இருந்தது. கடந்த பாராளுமன்ற அமர்விலும் ஆயத்தமாக இருங்கள் என்று கூறிவிட்டு, பிறகு அது மறுக்கப்பட்டது.

என்னை பாராளுமன்ற அமர்வுகளுக்கு நிச்சயம் அழைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் உட்பட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். என்னை குற்றவாளியாக்கி சிறைப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தியே இது இடம்பெற்றுள்ளது. இதுவரையில் என்னை எந்த நீதிமன்றத்துக்கும் கொண்டுசெல்லவும் இல்லை. சட்டமா அதிபர் திணைக்களத்திலும் கூட எந்தவொரு அனுமதியும் பெறவில்லை.

இரவோடிரவாக நான் தூங்கிக்கொண்டிருந்த வேளை, சுமார் ஒன்றரை மணியளவில் வீட்டுக்குள் புகுந்து, என்னை வலுக்கட்டாயமாக கைது செய்து அழைத்துச் சென்றனர். ஏதாவது பிடிவிறாந்து இருக்கின்றதா? எனக் கேட்டேன். இல்லை என்றனர். அவ்வாறாயின் குற்றமிழைத்ததற்கான ஏதாவது சாட்சிகள் உண்டா? என அவர்களிடம் கேட்டேன். எதுவுமே சொல்லாமல் என்னைக் கைது செய்து, நான்காம் மாடிக்கு அழைத்துச் சென்றனர்.

எந்தவிதமான குற்றமும் செய்யாத ஒருவரை, இவ்வாறு நான்காம் மாடியில் தடுத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயம்? எனக் கேட்கின்றேன். நான் ஏதாவது தவறு செய்திருந்தால், அவ்வாறான குற்றங்களை நீதிமன்றுக்கு சமர்ப்பித்து, என்னை அங்கு ஆஜர்படுத்த வேண்டும். அல்லது நீதிபதிக்கு அவற்றை அனுப்பி, என்னைக் கைது செய்வதற்கான அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், இவை எதுவும் நடைபெறாமல், கடந்த 25 நாட்களாக, இன்னும் நான் நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன். என்னை அழைத்து சென்ற பின்னர், எனது அமைச்சின் செயலாளரின் பெயர் என்ன? மேலதிக செயலாளரின் பெயர் என்ன? அவர்களுடன் தொலைபேசியில் நீங்கள் பேசுவீர்களா? இவ்வாறுதான் விசாரித்தார்கள். என்னை தெரிவு செய்த மக்களும், எனது கட்சியின் ஆதரவாளர்களும், என்னை நேசிக்கும் அனைத்து மக்களும் இன்று வேதனையில் உள்ளனர். ஜனநாயகத்தை நேசிக்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும், சிவில் அமைப்புக்களுக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். இந்த நாட்டு ஜனாதிபதியிடம் நீங்கள் ஒன்றைக் கேட்க வேண்டும்.

உங்களிடம் இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனநாயக வழியில், வாக்குரிமையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியை, பாராளுமன்றத்துக்கு தொடர்ச்சியாக ஐந்து தடவை தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை, எந்தக் குற்றச்சாட்டுக்களையும் நீதிமன்றத்தில் சுமத்தாமல், இவ்வாறு கைது செய்து தடுத்து வைத்திருப்பதன் நோக்கம் என்ன? என்ற நியாயத்தைக் கேளுங்கள். ஈஸ்டர் தாக்குதலின் பின்னர், சி.ஐ.டியினர் என்னை விசாரித்தனர். எனது அமைச்சு தொடர்பில் துருவித்துருவி கேள்வி கேட்டனர்.

கைத்தொழில் அபிவிருத்தி சபை தொடர்பிலும் வினவினர். மூன்று முறை என்னை விசாரித்துவிட்டு, அந்த விசாரணைகள் தொடர்பிலான கோவைகளை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தனர். சட்டமா அதிபர் திணைக்களமோ இதுவரையில் என்னைக் கைது செய்யுங்கள் என்று கூறவில்லை. ஏனெனில், அவ்வாறு கூறுவதற்கான எந்தக் காரணமும் திணைக்களத்திடம் இருக்கவில்லை. யாரோ ஒரு மதகுரு ஒருவரை திருப்திப்படுத்துவதற்காகவும், சந்தோஷப்படுத்துவதற்காகவும், சிறுபான்மை சமூகம் ஒன்றின் பிரதிநிதி ஒருவரை, அதுவும் கட்சியின் தலைவர் ஒருவரை இன்று அடைத்து வைத்துள்ளனர்.

நான் குற்றம் செய்திருப்பின் எனக்கு மரண தண்டனையைக் கூடத் தாருங்கள். ஆனால், நான் அணுவளவும் குற்றஞ்செய்யவில்லை. எனக்கு இந்தக் குண்டுத் தாக்குதலுடன் எந்த சம்பந்தமும் இல்லை. இது தொடர்பில், சி.ஐ.டி யினால் பலமுறை விசாரிக்கப்பட்டேன். அப்போது, பிரதி பொலிஸ்மா அதிபராகவிருந்த தற்போதைய பொலிஸ்மா அதிபரே பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ரிஷாட் பதியுதீன் குற்றமற்றவர் என அறிவித்திருந்தார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரான ரவி செனவிரத்னவின் கையெழுத்திட்ட அறிக்கையையே அவர் தெரிவுக்குழுவுக்கு அனுப்பி வைத்திருந்தார். பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும் என் மீதான பத்துக் குற்றச்சாட்டுக்களும் விசாரிக்கப்பட்டு, நான் நிரபராதி என தெரிவுக்குழு தெரிவித்தது. பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 68 பேர் கையெழுத்திட்டு, என்மீது பத்துக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. எனவே, என்னை பழிவாங்குவதற்காகவே, இப்போது காரணமின்றி கைது செய்து, என்னை தடுத்து வைத்துள்ளனர் என்று கூறினார்.




## மரணவீட்டில் கலந்து கொண்ட 24 பேருக்கு கொரோனா

தேவராஜமுதலி ஸ்ரீவ் சஞ்ஜீவ் தெரிவித்தார். இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

மட்டக்களப்பு நகரில் கொவிட் தொற்றுக்குள்ளான ஐந்துபேர் குறிப்பிட்ட மரணவீட்டில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து மரணவீட்டில் கலந்துகொண்ட தெரிவு செய்யப்பட்ட 41பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர் பரிசோதனையின் போது 24பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளானவர்கள் அனைவரும் மருதநகர் கிராமத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 49பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், ஒருவாரத்திற்குள் 249பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதுவரை கொவிட் தொற்றினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 21பேர் மரணமடைந்துள்ளதாக பிராந்திய சுகாதாரபணிமனை தெரிவித்துள்ளது.

## மன்னார் ஆலயங்களில் சோக மணியோசை ஒலிக்கவைத்து முள்ளிவாய்க்காள் நினைவஞ்சலி

ஆலயங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

இதைத் தொடர்ந்து வீடுகளிலும் தங்கள் உயிர்களை ஈர்ந்ததை நினைத்து மெழுகுதிரிகைகளை ஏற்றிவைத்தது டன் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்தவேளையில் ஆலயங்களில் சோக மணியோசை எழுப்பப்பட ஆலயங்களில் நின்றவர்களும் வீடுகளில் இருந்தவர்கள் அனைவரும் அக வணக்கம் செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து மே மாதம் தேவ அன்னையின் வணக்க மாதமாக கத்தோலிக்க மக்கள் அனுசரித்து வருவதால் இன்றையத்தினம் இவ் வணக்க மாத செப வழிபாட்டை முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்காகவும் அவர்களை இழந்து தவிக்கும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் ஒப்புக்கொடு;க்கும் நிகழ்வாக இடம்பெற்றது.

## சுகாதார வழிமுறைகளை மீறிய கடைகளுக்கு பூட்டு

வைத்திய அதிகாரி எம்.எம்.அல் அமீன் றிசாட் அவர்களின் தலைமையில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாத மற்றும் காலாவதியான உணவுவகைகளை விற்பனை செய்த கடைகள் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.நிஸ்தார் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் என்.எம். பைலான் ஆகியோரின் நெறிப்படுத்திலின் கீழ் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத கடைகள் பூட்டும் பொருட்களை விற்பனை செய்யும் கடைகள் மற்றும் உணவகங்களுக்கு திடீர் பரிசோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றாத ஒரு ஆடை விற்பனை நிலையமும் சிறு கடை ஒன்றும் 14 நாள் மூடப்பட்டு வழக்குதாக்கல் செய்யப்பட்டதுடன் மேலும் பழுதடைந்த உணவு வகைகளை விற்பனை செய்த 2 கடைகளுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இக் கள விஜயத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக பல்நோக்கு அபிவிருத்தி செயலனி திணைக்களத்தின் பயிலுநர் குழுவும் கலந்து கொண்டது.




## மக்களின் மருத்துவ தேவைகளை எடுத்துக்கூறினால் நான் இனவாதியா?

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

கிழக்கு மாகாணத்தில் 1000 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 500 மாதிரிகளின் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் 2200 கொரோனா நோயாளிகள் உள்ளனர்கள். 52 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒட்சிசன் வழங்குவதற்கான வசதிகள் இல்லை. நோயாளர் காவு வண்டிக்காக 194 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது. அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாண மக்களுக்கு ஏன் நீங்கள் வேற்றுமை காட்டுகின்றீர்கள்? என கேள்வியெழுப்பியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர், இன்று அரசாங்கத்தினால் கொரோனா ஒழிப்பிற்கு தேவையான நிதி வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

நாங்கள் பி.சி.ஆர் பரிசோதனை வசதிகளை அதிகரிக்கவுள்ளோம். பரிசோதனைக் கூடங்களை அதிகரிக்கவும், 24 மணித்தியாலங்கள் வரை சேவையில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளோம்.

கொரோனா தோற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதானால் நாங்கள் பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றோம்.' எனக் குறிப்பிட்டார்.

இதற்கு பதில் வழங்கிய சாணக்கியன், 'பிரதமர் கூறிய வார்த்தையை கூட நீங்கள் கேட்கவில்லை. இச்ஞுட டீச்ஞ என்று கூறியவுடன் என்னை இனவாதி என்றார். பிரதமருக்கு வழங்கிய அறிக்கையினை கூட நீங்கள் நிறைவேற்றவில்லை. இனவாதத்தை நான் அல்ல நீங்கள் தான் தூண்டுகின்றீர்கள்.' எனக் குறிப்பிட்டார்.

## திருமலையில் 24 மணி நேரத்தில் 5 பேர் மரணம்; 50 தொற்றாளர்கள்

இதில் கிண்ணியா சுகாதார பிரிவில் 20, மூதூர் 15, திருகோணமலை 07, கந்தளாய் 03, குறிஞ்சாக்கேணி 3, உப்புவெளி 2 என்றவாறாக புதிய தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளார்கள்.

இம்மாதம் (மே மாதம்) மாத்திரம் தற்போது வரை 795 தொற்றாளர்களுமாக இது வரைக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 2236 தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டார்கள். கடந்த 24 மணி நேரத்தில் 435 பிசீஆர் மாதிரிகளும் 373 அன்டிஜன் மாதிரிகளும் பெறப்பட்ட நிலையில் மாவட்டம் முழுதும் 13006 பிசீஆர், 18165 என்டிஜனும் பெறப்பட்டுள்ளது. மொத்தமாக 24 மணி நேரத்திற்குள் ஐந்து மரணங்கள் பதிவாகிய நிலையில் 42 மரணச் சம்பவங்கள் இது வரைக்கும் மாவட்டம் முழுதுமாக மொத்தமாக பதிவாகியுள்ளது.

கடந்த 24 மணி நேர மரண சம்பவத்தில் திருகோணமலை சுகாதார பிரிவில் 2, கிண்ணியா 3 எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது வரையான மரண பதிவுகளாக மொத்தமாக திருகோணமலை சுகாதார பிரிவில் 12, கிண்ணியா 10, உப்புவெளி 8, மூதூர் 4, குறிஞ்சாக்கேணி 4, கந்தளாய் 3, குச்சவெளி 1 என புள்ளி விபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பில் ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இன்று முதல் முடக்க தீர்மானம்

நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் இவ்விசேட கூட்டமானது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான மாவட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும், நோயாளர்களுக்கான இடப்பற்றாக்குறை மற்றும் குணமடைந்து சொந்த இடங்களுக்கு திருப்பியனுப்பப்படுவோருக்கான விடயங்கள், தனிமைப்படுத்தப்பட வேண்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பாகவும், இக்காலகட்டத்தில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனவும் அதற்காக அரச நிறுவனங்களின் முன்னேற்பாடுகள் தெடர்பாகவும் ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டத்தின் நிறைவில் இடம்பெற்ற செயலணியும் தீர்மாணங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தொரிவிக்கையில், மாவட்டத்தின் கொவிட் நிலையினை கருத்திற்கொண்டு மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயல பிரிவிற்குட்பட்ட ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை இன்று புதன்கிழமை முதல் முழுமையாக முடக்குவதற்கான தீர்மானத்தினை தேசிய கொவிட் செயலணிக்கு பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்தார்.

பாலமீன்மடு, நொச்சிமுனை, கல்லடி வேலூர், சின்ன ஊறணி, திருச்செந்தூர் ஆகிய ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளே இவ்வாறு முடக்கப்படவுள்ளது.

இன்றிலிருந்து மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அத்தியாவசிய தேவையாக கருதப்படும் வியாபார நடவடிக்கைகள் மாத்திரமே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை கொவிட் தொற்றினை மாவட்டத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு மாவட்ட மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமெனவும், சுகாதார வழிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றி நடப்பதன் ஊடாக கொவிட்டை முற்றாக ஒழிக்க முடியுமெனவும் தெரிவித்திருந்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட கொவிட் செயலணியின் இராணுவத்தரப்பு பிரதானி 231 வது படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் வீ.எம்.என்.எட்டியாராச்சி, மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.




## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கல்குடா கடற்கரையில் 8 பேர் கைது

இவர்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாத இயக்கத்தை புனரமைக்கும் செயல் திட்டத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரைக்கமைவாக கல்குடா பொலீஸாருடன் ஏறாவூர் பொலிஸ் குழுவினரும் இணைந்து இச்சுற்றிவளைப்பு நடவடிக்கையினை செய்துள்ளனர்.

இவர்கள் தீபச்சுடர் ஏற்றி நினைவேந்தல் செய்த பின்னர் கடலில் மலர்த்தட்டு பூஜை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து கைது செய்யப்பட்ட இவர்கள் மூன்று நாட்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

வெளிநாட்டு டயஸ்போராக்களின் நிதியுதவியுடன் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் முக்கியஸ்தரான விபுலசேனலவக்குமார் என்பவரின் தலைமையில் இந் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்நபர் உட்பட 10 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்த தெரிவித்தார்.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா–வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# மன்னாரில் முள்ளிவாய்காலில் நினைவேந்தல்

(வாஸ் கூஞ்ஞ)

ள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மன்னாரில் தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் தலைமையில் அவ் அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கொவிட் 19 சுகாதார நடைமுறைகளுக்கேற்ப குறிப்பிடப்பட்டவர்களுடன் இவ் நினைவேந்தல் இடம்பெற்றது.

இறந்த உறவுகளை நினைவுகூற கூட நாம் அச்சத்தின் மத்தியிலும் பயத்தின் மத்தியிலும் நினைவுகூறுவது எமக்கு கிடைக்கப்பெற்ற துர்ப் பாக்கிய நிலமையாகும். நாம் இறந்துபோன எமது சகோதரர்களை நினைவுகூற முடியாத நிலையில் இங்கு இருக்கின்றோம் என்றார்.





இவ் நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட மனித உரிமைக்கான ஆனைக்குழு இயக்கனர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் அடிகளார், மன்னார் மாவட்ட சைவக்கலை இலக்கியப் பெருமன்றத் தலைவர் செந்தமிழரவி மஹா.தர்மகுமார குருக்கள் உட்பட மட்டுப்படுத்தப்பட்ட முக்கியஸ்தர்கள் சிலரும் இதில் கலந்துகொண்டனர்.

முள்ளிவாய்காளில் இன்னுயிரை ஈர்ந்த மக்களின் நினைவு படத்துக்கு அருட்பணி எஸ்.ஜெயபாலன் குத்துவிளக்கேற்றி வைக்க தர்மகுமாரக் குருக்கள் மலர் மாலை அணிவிக்க இதைத் தொடர்ந்து கலந்துகொண்டவர்கள் மலர் தூவி மெழுகுதிரி ஏற்றி இறை வணக்கத்துடன் இவ் நிகழ்வில் கலந்துகொண்டனர். அத்துடன் மரணித்தவர்களின் நினைவாக கஞ்சியும் பரிமாறப்பட்டன.

# வடக்கு கிழக்கு ஆயர்களின் அறிக்கையை வரவேற்றுள்ள அருட்பணி எஸ்.ஜெயபாலன் அடிகளார்

(வாஸ் கூஞ்ஞ)

வடக்கு , கிழக்கிலுள்ள நான்கு மறை மாவட்ட ஆயர்களும் முள்ளிவாய்க்கால் தினமாகிய இந்நாளை இன அழிப்பு நாள் என்ற சிந்தனையுடன் இறை வழிபாட்டில் ஈடுபடும்படி அவர்கள் ஒன்றித்து அறிக்கையிட்டிருப்பது ஒரு சிறந்த அம்சமாகும் என மன்னார் மறைமாவட்ட மனித உரிமை ஆனைக்குழு இயக்குனர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று செவ்வாய் கிழமை மன்னாரில் தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் எற்பாட்டில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின்போது கலந்துகொண்ட மன்னார் மறைமாவட்ட மனித உரிமை ஆனைக்குழு இயக்குனர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் அடிகளார் தொடர்ந்து உரையாற்றுகையில்

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை நினைத்து நாம் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவேண்டுதல் செய்யும் நாளாகும்.

இவ்வருடம் இவ்விடயத்தில் ஒரு சிறப்பு அம்சமாக இருப்பது வடக்கு கிழக்கிலுள்ள நான்கு மறைமாவட்டங்களின் கத்தோலிக்க ஆயர்கள் ஒன்றாக இணைந்து இந்த நாளை ஒரு இன அழிப்பு நாள் என நினைவுகூர்ந்து நாம் இதை அனுசரிப்போம் என அறிக்கைவிட்டுள்ளனர்.

இந்த நாளில் சகல ஆலயங்களிலும் பிற்பகல் ஆறு மணிக்கு சோக மணி இசைத்து கொவிட் 19 இன் காரணமாக வீடுகளில் இருந்தவாறும் ஆலயங்களிலும் இறை வழிபாடு செய்யும்படி எமக்கு தெரிவித்துள்ளனர்.

இன்று நாம் கஞ்சி பரிமாறுகின்றோம். இது வெறுமனே கஞ்சி அருந்துவதல்லமாறாக ஒவ்வொரு வருடமும் நாம் இந்த கஞ்சியை இந்நாட்களில் அருந்தும்போது முள்ளிவாய்க்கால் நினைவுடன் எமது விடுதலை வேட்கை எமது எதிர்கால சமூதாயத்துக்கு தெரிவிக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் அமைய வேண்டும்.

நாம் இலை கஞ்சியை வழங்கும்போது இலை பசுமையானது இன விடுதலையை நோக்கி பயணிக்கும் ஒரு பசுமையான சிந்தனையை தூண்டும் என நினைக்கின்றேன் என்றார்.

# அரசு ஊழியர்களின் மே மாத சம்பளத்தை முன்கூட்டியே வழங்க நடவடிக்கை

(பைஷல் இஸ்மாயில்)

அரசு ஊழியர்களின் 2021 மே மாதத்திற்கான சம்பளத்தை முன்கூட்டியே வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைவாக, குறித்த மாதத்திற்கான சம்பளத்தை மே 21 ஆம் திகதியில் வழங்க பொதுத் திறைசேரி தீர்மானித்துள்ளதாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச் சி டி எல் சில்வா சகல அமைச்சுக்களின் செயலாளர்கள் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் , திணைக்களத் தலைவர்கள் முப்படை தளபதிகள் ஆகியோர்களுக்கு அறிவித்துள்ளார்.

# வட மத்திய மாகாணத்தில் வாகன வருமான வரிப்பத்திரம் வழங்கல் இடைநிறுத்தம்

(முஹம்மட் ஹாசில்)

வட மத்திய மாகாணத்தில் பதிவான வாகனங்களுக்கான வருமான வரி பத்திரம் வழங்கல் நடவடிக்கை எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் காலாவதியாகும் வருமான வரிப்பத்திரங்களை, மீள புதுப்பிக்கும்போது, எவ்வித அபராதமும் விதிக்கப்படமாட்டாது என வட மத்திய மாகாண போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

# வாழைச்சேனையில் 51 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை



( ந.குகதர்சன் )

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஐம்பத்தியொரு நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டி.எஸ்.சஞ்ஜீவ் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து காணப்படும் நிலையிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்த நிலையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தொடர்ச்சியாக பி.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள வியாபார நிலையத்தினர், சுகாதார திணைக்களத்தின் சட்டத்தினை மீறி அலுவலகத்தில் அதிகமான ஊழியர்களை கொண்டு இயங்கிய தனியார் முதலீட்டு நிறுவனத்தில் கடமையாற்றி ஊழியர்கள் என ஐம்பத்தியொரு நபர்களுக்கு பீ.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்றது.

குறித்த பீ.சி.ஆர் பரிசோதனையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலை பரவியுள்ள நிலையிலும், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலும் அதிகரித்து காணப்படும் நிலையில் பொதுமக்கள் விழிப்புடன் இருந்து பிரதேசத்தினை பாதுகாத்துக் கொள்ளுமாறும் சுகாதார வைத்திய அதிகாரி டி.எஸ்.சஞ்ஜீவ் தெரிவித்தார்.

# உடல் வெப்பநிலை அறியும் கருவிகள் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பு



(ஏறாவூர் நிருபர்)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிமனைக்கு வழங்கப்பட்ட உடல் வெப்பநிலை அறியும் கருவிகளை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு வலயக் கல்வியலுவலக வளாகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வலயக் கல்விப்பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கணக்காளர் எஸ்எச். நௌபீக் உள்ளிட்ட அதிகாரிகள் பிரசன்னமாயிருந்தனர்.

ஏறாவூர், காத்தான்குடி மற்றும் கோறளை மேற்கு ஆகிய கல்விக்கோட்டத்திலுள்ள பதினாறு பாடசாலைகளுக்கு உடல் வெப்பநிலை அறி கருவிகள் கையளிக்கப்பட்டன.

இவ்வலயத்திலுள்ள 78 பாடசாலைகளுக்கும் இக்கருவிகள் தேவையென அறிவிக்கப்பட்டநிலையில் முதற்கட்டமாக மாகாண கல்வித்திணைக்களத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு தொகுதி பாடசாலைகளுக்கு கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக தற்போது காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதும் மாணவர்களது பாதுகாப்புக்கருதி தினமும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது உடல் வெப்பநிலை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# மட்டக்களப்பில் தீவிர கண்காணிப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் நகர் பகுதிகளில் பொது மக்களின் நடமாட்டத்தினை கட்டுப்படுத்தும் பொருட்டு நேற்று காலை முதல் பொலிசார் அடையாள அட்டைப் பரிசோதனையினை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஒற்றை எண்ணைக் கொண்ட நாட்களில் அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தை ஒற்றை இலக்கமாக கொண்டவர்களும், இரட்டை எண்ணையுடைய நாட்களில் அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தை இரட்டை இலக்கமாக கொண்டவர்களே பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் அத்தியாவசிய தேவைகளின் பொருட்டு வெளிச்செல்ல முடியும் என இதன்போது பொலிசார் அறிவித்தல் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.






# நியமனத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றும் மருத்துவர் கொஸ்தா கந்தளாய் வைத்தியசாலைக்கு அத்தியட்சர் ஆக நியமிக்கப்பட உள்ளார்.



இவரது நியமனத்தை எதிர்த்து திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என் கே டி எஸ் குணவர்தனவின் மகன் நளின் குணவர்தன மாகாண சபை உறுப்பினர் ஜெயசேகர ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

கந்தளாய் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு பல மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் அதனை செயல்படுத்துவதற்காக மருத்துவர் கொஸ்தா அங்கு நியமிக்கப்பட இருப்பதாக கூறிய இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

# மன்னாரில் ஏ-14 வீதி அபிவிருத்தி முன்னெடுக்கப்படும்

## மாவட்ட செயலக கூட்டத்தில் தீர்மானம்

(வாஸ் கூஞ்ஞ)



'ஐ' அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மன்னார் தலைமன்னார் வரைக்கான வீதி அபிவிருத்தி திட்டம் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மன்னார் நகருக்குள் சின்னக்கடை பகுதியில் இடையூறாக இருக்கும் கட்டடிட மதில்களால் இந் பகுதியில் இவ் வீதியை சரியான முறையில் முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் மதில்கள் அகறறப்படும்போது பாதிப்டையும் மக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இவ் திட்ட பிரமாணத்துக்கமைய இவ் வீதியின் அபிவிருத்தி வேலை ஒரு மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் மதவாச்சி ஏ14 பிரதான வீதியானது 'ஐ' அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தற்பொழுது மன்னாரிலிருந்து தலைமன்னார் வரையான வீதியின் அபிவிருத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மன்னார் நகரில் எச்எம்பி வங்கியிலிருந்து மன்னார் நகர விளையாட்டு மைதானம் வரைக்குமான இவ் இடத்தில் வீதிக்கு அருகாமையில் வீடுகள், மதில்கள் அமைக்கப்பட்டுள்ளமையால் இவ்விடத்தில் வீதியானது ஒடுக்கமாக காணப்படுகின்றது.

ஆகவே இவ் வீதியை அகலப்படுத்தி பாதுகாப்பான முறையில் இவ் வீதியில் மக்கள் நடமாடுவதற்கேற்றவாறு செப்பணிடுமாறு மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க திங்கள் கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் ஒரு விஷேட கூட்டம் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் தலைமையில் நடைபெற்றது.

இவ் கூட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் றொயிஸ் குரூஸ் இவர்களுடன் ஏனைய திணைக்கள தலைவர்களுடன் இவ் வீதியை அகலப்படுத்தும்போது அதில் பாதிப்புக்கு உள்ளாகப்போகும் மக்களும் கலந்து கொண்டனர்.

இதுவிடயமாக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் தெரிவிக்கையில்;

இவ் கூட்டத்தின்போது இவ் விடத்தில் இவ்வீதியை அமைக்கும்போது மதில்கள் உடைக்கப்படும்போது அவர்களுக்கு அவ் விடத்தில் மதில்கள் அமைத்துக் கொடுக்கும் தேவைபாடுகள் காணப்பட்டுள்ளது எனவும்

ஆகவே இது சம்பந்தமாக பாதிப்படைவோருடன் கலந்துரையாடி ஒரு மாதத்துக்குள் மதில்கள் அகறறப்பட்டு அவைகள் மீளக்கட்டப்பட்டு புனரமைக்கப்பட இருக்கும் வீதிக்குரிய அளவு பிரமாணத்தை ஏற்படுத்தி தருவதற்காக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மன்னார் பிரதேச செயலாளரையும் இணைத்து ஒரு குழுவினரை நாங்கள் அமைத்துள்ளோம் எனவும்.

இக்குழு சரியான வழிமுறைகளை ஏற்படுத்தி அறிக்கையொன்றை எம்மிடம் சமர்பித்ததுடன் நாங்கள் இவ் வீதி திட்டத்தில் ஈடுபடும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியபின் இவ் திட்டத்தை தொடர்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது என இவ்வாறு அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் தெரிவித்தார்.

# 100 அடி பள்ளத்தில் பாய்ந்த கார்

## இருவர் பலத்த காயம்



(க.கிஷாந்தன்)

நுவரெலியா - இராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராகலை சூரியகந்தை பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுங்காயம்பட்டு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அக்கரைப்பற்று பகுதியிலிருந்து அட்டன் பகுதிக்கு சென்ற கார் ஒன்று நுவரெலியா - வலப்பனை பிரதான வீதியிலிருந்து வீதியை விட்டு விலகி குறித்த கார் சுமார் 100 பள்ளத்தில் உள்ள நுவரெலியா இராகலை பிரதான வீதிக்கு பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி காரில் இரண்டு பேர் பயணித்துள்ளதாகவும், இதில் இருவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ் விபத்து நேர்ந்துள்ளதாக இராகலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலையில் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை

(எப்.முபாரக்)

மாவட்டங்களுக்கிடையே அத்தியாவசிய சேவை மற்றும் அத்தியாவசிய தேவை நிமித்தம் பயணங்களை மேற்கொள்வோருக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரளவின் வழிகாட்டலுக்கமைய மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி குறித்த அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்படிவத்தை பிரதேச செயலகங்களில் பெற்று பூர்த்திசெய்து குறித்த விண்ணப்பபடிவத்தில் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களிடம் சிபாரிசினை பெற்று மாவட்ட செயலகத்தில் கையளித்தல் வேண்டும்.



பின்னர் குறித்த விண்ணப்பபடிவத்தில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிக்கு உரிய பயண அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

சுகாதார நடைமுறைகளைப்பின்பற்றி மக்களது குறித்த தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

# ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி

## கல்வி அமைச்சுக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை



பாடசாலை மீண்டும் தொடங்குவதற்கு முன், ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சுக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை பிடித்துள்ளதாக சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களாக;

கொரோனாத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், நாட்டின் முன் நின்று பணிபுரிந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு ஊழியர்களுக்கு தடுப்பூசிக்குப் வழங்கியதன் பின் மிக ட ஆபத்தான சூழ்நிலையில் பாதுகாத்ததுடன்

பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள் உட்பட கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், அப்போதே பாடசாலைகள் தொடங்வதற்கு முன்பு அனைத்து கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் தடுப்பூசி போட வேண்டும் என்றும் எங்கள் சங்கத்தினால் 2021.02.23. அன்று எழுத்து மூலம் கோரப்பட்டது. அந்த நேரத்தில் உங்களால் தடுப்பூசி போடப்படும் என்ற அறிவிப்பை நிறைவேற்றத் தவறியதற்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எதிர்ப்புத் தெரிவிப்பதோடு சுகாதாரத் துறையுடன் கலந்துரையாடல்களை நடாத்தி விரைவாக தடுப்பூசிகளை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் மிகப் பொறுப்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

02 . எதிர்காலத்தில் தேசிய அளவில் பரீட்சைகள் நடைபெறவுள்ளது என்பதும், அதற்கு முன் மாணவர்களைப் பாடசாலைக்கு அழைக்க வேண்டும் என்பது தொடர்பாக நீங்கள் அறிந்த விடயமாகும்.

இத்தகைய சூழ்நிலையில், தடுப்பூசியின் முதலாவது அளவைக் கொடுத்து , சில மாதங்களுக்குப் பிறகு இரண்டாவது அளவை கொடுப்பதும் அதன்படி நோயெதிர்ப்பானது உடலில் சரியாகச் செயற்பட எடுக்கும் காலமாக அமையும் என்பது சுகாதாரத் துறையின் கருத்தாக இருப்பதால் இந்தக் காலகட்டத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கூற வேண்டியுள்ளது.

03. இத்தகைய சூழலில், நாட்டில் 45 லட்சம் மாணவர்கள் மற்றும் 3 லட்சம் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் பொதுவாகச் சமூகத்தின் பாதுகாப்பினையும் கருத்தில் கொண்டு தடுப்பூசி வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாத கடமையாகும்.

# நிந்தவூரில் சுகாதார வழிமுறைகளை மீறியோருக்கு அன்டிஜன் பரிசோதனை

(நூருல் ஹுதா உமர்)

நாட்டிலிருந்து கொரோனாவை இல்லாதொழிக்கும் முகமாகவும் தொற்றை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்கும் முகமாகவும் சுகாதாரத்துறை பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அதன் ஒரு கட்டமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் பணிப்புரைகளுக்கு அமைய நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பிரோஸா நக்பர் அவர்களின் தலைமையில் நிந்தவூர் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகரின் மேற்பார்வையில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் இணைந்து களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



இதன்போது அரசாங்க மற்றும் சுகாதார திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட சட்ட வரையறைகளையும் பொதுச் சுகாதார விதிமுறைகளையும் மீறி நிந்தவூர் பிரதேசத்தின் உள்ளாத்துக்கட்டுப்பகுதியில் ஒன்று கூடலில் ஈடுபட்ட இளைஞர்கள் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டு இதன்போது சுகாதார அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டது.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245

# அம்பாறையில் ஆயிரத்தை நெருங்கும் தொற்று அக்கரைப்பற்று சந்தையில் எழுந்தமானமாக பி.சி.ஆர்.

(வி.சுகிர்தகுமார்)



அம்பாறை மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில் நேற்று அக்கரைப்பற்று சந்தைப்பகுதியில் எழுந்தமானமாக பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 941 ஆக அதிகரித்துள்ளதுடன் கல்முனை பிராந்தியத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணனின் ஆலோசனையின் பிரகாரம் அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.ஏ.காதர் தலைமையிலான பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள், பொலிசார் உள்ளிட்டவர்களின் ஒத்துழைப்பில் இப்பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

வீதியில் கொரோனா கட்டுப்பாடுகளைமீறி மோட்டார்சைக்கிளில் பயணித்தோர் மற்றும் ஆட்டோ உள்ளிட்ட வாகனங்களில் பயணித்தோர்கள் அக்கரைப்பற்று பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன் கட்டுப்பாடுகளை மீறியோர் என கருதப்பட்டோர் மீதும் இப்பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு அத்தியாவசிய தேவைகளின்றி நடமாடியோர் மற்றும் வாகனங்களும் கண்காணிக்கப்பட்டன.

இதே நேரம் கொரோனா மூன்றாவது அலையின் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தில் 3000 தை அண்மித்துள்ள நிலையில் அம்பாரை மாவட்டத்திலும் 1000 தை தொடும் நிலையில் உயர்வடைந்துள்ளமை கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் புள்ளிவிபர தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

அதே போல் கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 86 ஆக உயர்வடைந்துள்ளதுடன் அம்பாரை மாவட்டத்தில் 23 ஆகவும் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பொதுமக்கள் பொறுப்புடனும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடந்து கொள்ளுமாறும் சுகாதாரத்துறை அரசு உள்ளிட்ட பலர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துரைரெட்ணசிங்கம்
## 1941- 2021



(பொன்ஆனந்தம்)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். கதிர்காமத்தம்பி துரைரெட்ணசிங்கம் அவர்களின் இறுதி கிரிகைகள் திருகோணமலை இந்து மயானத்தில்நேற்று 12 மணியளவில் நடைபெற்றது.

கொரோனா தாக்கத்துக்குள்ளான நிலையில் பெட்டி மூடப்பட்ட நிலையில் இந்து மயானத்திற்கு எடுத்து வரப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இந்நிலையில் அவரது இழப்பு குறித்து பலரும் அஞ்சலியையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்த வண்ணமுள்ளனர்

திருகோணமலை மாவட்டம், கொட்டியாபுரப்பற்றின் சேனையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர். 1941.01. 04.இல் பிறந்தார்.

மெதடித்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, மூதூர் புனித அந்தோனியார் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயின்று பின்னர் மட்டக்களப்பு ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றார்.

1960 ஆம் ஆண்டு முதல் பல பாடசாலைகளில் பணியாற்றிய பின்னர் 1982 இல் சேனையூர் மத்திய கல்லூரியின் பிரதி அதிபராக வும், இறுதியாகஅதிபராகப் பதவி உயர்வு பெற்று சிறந்த பணியாற்றிவந்தார். பின்னர் கொத்தணி அதிபராக வும் கடமையாற்றி யுள்ளார்.

1998 இல் திருகோணமலை பிராந்தியக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு பின்னர் தம்பலகாமம் கோட்டக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றி கல்வித்துறையில் இருந்து இளைப்பாறினார்.

துரைரெட்ணசிங்கமன 2001 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ததேகூ) சார்பாகப் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டார். ததேகூ உறுப்பினர்களில் இரண்டாவதாக வந்தும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகவில்லை. ஆனாலும், ததேகூ தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் மரணமடைந்ததைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக 2002 யூன் மாதத்தில் நாடாளுமன்றத்துக்கு இவர் நியமிக்கப்பட்டார்.

திருகோணமலைத் தேர்தல் தொகுதியில் 2004 ஆம் ஆண்டில் மீழவும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தனிப்பட்ட காரணங்களுக்காக 2010 தேர்தல்களில் இவர் போட்டியிடவில்லை.

துரைரட்ணசிங்கம் 2015 நாடாளுமன்றத் தேர்தலில் ததேகூ வேட்பாளராக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை.

இவர் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதேவேளையில் தமிழரசுக்கட்சி யின் திருகோணமலை மாவட்ட குழுதலைவராக பணியாற்றய இவர் இறுதிவரை தமிழரசுக் கட்சி யின் உபதலைவராக வும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேசிய ரீதியிலும் இலங்கையிலும் அகோரமாக பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கந்தளாய் தள வைத்தியசாலையில் கொரோனே தொற்றுடன் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்று திங்கள் இரவு தனது 80வது வயதில் காலமானார்.

## தமிழ் மக்களின் கல்விக்கு அளப்பரிய சேவையாற்றிய துரைரெட்ணசிங்கம்

### சம்பந்தன் இரங்கல்

தமிழ் மக்களின் கல்விச்சேவைக்கும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கும் மிகவும் உறுதுணையாக செயற்பட்ட திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கம் அவர்களின் திடீர் இழப்பு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என த.தே.கூ தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், சேனையூரை பிறப்பிடமாக கொண்டதுரைரெட்ண சிங்கம் சேனையூர் மத்திய கல்லூரியின் வளர்ச்சியிலும், மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியிலும் முக்கிய பக்கு வகித்தவர். அன்னார்திருகோணமலை மாவட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்து பல தடவைகள் பாராளுமன்றம் சென்று தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் எழுப்பியவர். தமிழ்த்தேசியகூட்டமைப்பின் செயற்பாடுகள் அதன் வளர்ச்சிக்கும் மிகவும் உறுதுணையாக நின்று செயற்பட்டவர்.

அன்னாரின் இழப்பு தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும் என சம்பந்தன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

## துரைரெட்ணசிங்கத்துக்கு கண்ணீர் வணக்கம்!

முகத்தில் புன்சிரிப்பு எப்போதும்!
அகத்தில் அரவணைக்கும் குணம்!
ஆத்திரம் வந்தாலும் அடக்கம்!
அன்பு ஒன்றே இவரின் பண்பு!

அமரர் துரைரெட்ணசிங்கம் ஐயா!
அறம் சார்ந்து நடப்பதில் வல்லவர்!
அகிம்சையாய் வாழ்ந்த உன்னதமனிதர்!
ஆகுதியானதால் கவலைநாம் கொண்டோம்!

திருமலை மண் ஈன்ற தமிழ் பற்றாளன்!
எதிர்புகள் கடந்த இன உணர்வாளன்!
ஆசான் அதிபர் பதவிகள் பெற்றவர்!
ஆளுமை கொண்ட அரசியல் தலைவர்!

இலங்கை தமிழரசு கட்சியின் மீது!
இறுதிவரையும் சலிக்காமல் உழைத்தார்!
இரண்டாயிரத்து ஒன்றில் முதல்முதலாக!
தேசியபட்டியல் பாராளுமன்ற உறுப்பினரானார்!

இரண்டாயிரத்து நான்கில் தேர்தலில் வென்று!
இருபத்தி இரண்டு உறுப்பினர்களாக!
எம்முடன் இணைந்து சேவைகள் புரிந்தார்!
இக்கட்டான அச்சுறுதல்களை பெற்றார்!

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டும்!
தேசியபட்டியல் உறுப்பினராக பதவி ஏற்று!
தமிழ்தேசியம் சார்ந்த அரசியல் செய்தார்
இரண்டாயிரத்து இருபதில் ஓய்வெடுதார்!

இலங்கை தமிழரசு கட்சி மத்தியகுழுவில்!
இன்றுவரையும் செயல்பட்ட பெருமனிதர்!
எண்பதை தாண்டி இறையடி சேர்ந்தார்!
கண்ணீரை தந்து காலன் அணைத்தார்!

தருணம் பார்த்து கொரோனா நோய் வந்து!
தலைவர் துரைரெட்ணசிங்கத்தை காவியது!
நேரில் நாம் வந்து அஞ்சலி செலுத்தவும்!
நேரிய தமிழனை போற்றி வணங்கவும்!

நோய் காலச்சூழல் முடியாமல் போனாலும்!
அன்னார் ஆத்மா சாந்தி பெற வேண்டுவோம்!
துயருறும் அன்பு மனைவி பிள்ளைகள் சுற்றம்!
அனைவர்கும் ஆழ்ந்த துயரினை பகிர்வோம்!

-அம்பிளாந்துறையூர் அரியம்-

## மட்டக்களப்பில் அமரர் துரைரெட்ணசிங்கத்துக்கு அஞ்சலி







தமிழ் தேசிய கூட்டமைப்பும் திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கத்தின் மறைவையொட்டி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன்,க.துரைராஜசிங்கம்,மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவான் ஆகியோர் அஞ்சலில் செலுத்துவதை காணலாம்.

## 'இக்கட்டான சூழ்நிலைகளிலும் மக்களோடு மக்களாய் மக்களுக்காக வாழ்ந்து சேவையாற்றிய தலைவன்'

(எப்.முபாரக்)

பல இக்கட்டான சூழ்நிலைகளிலும் மக்களோடு மக்களாய் மக்களுக்காக வாழ்ந்து சேவையாற்றிய திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் அவர்களின் இழப்பு எமது மக்களுக்கு பேரிழப்பாகும் என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் வெளியிட்டுள்ள தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

மூதூர் - கட்டைபறிச்சான்கிராமத்தில் பிறந்த கௌரவ. துரைரெட்ணசிங்கம் அவர்கள் அரசியலுக்கு வரும் முன்பே அதிபராகவும், கோட்டக்கல்வி அதிகாரியாகவும் கல்விப்புலத்திலே சிறந்த சேவையை வழங்கி சிறந்த சேவையாளனாகவும், சிறந்த அதிகாரியாகவும் விளங்கினார். இதனாலேயே அவர் அரசியலுக்கு வரவேண்டும் என பலர் விரும்பினார்கள். அந்த வகையில் அரசியல்வாதியாக தனது பயணத்தை தொடர்ந்த அன்னார் இனம், மதம், மொழி



வேறுபாடு இன்றி அனைவருடனும் அன்பாகவும் எளிமையாகவும் பழகி தனது சேவையை வழங்கியிருந்தார்.

அத்துடன் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இரண்டு தடவைகள் பதவி வகித்ததோடு அக்காலப்பகுதியில் எமது நாட்டில் நிலவிய பல அசாசாரண சூழ்நிலைகளிலும் பல சவால்களை எதிர்கொண்டு மக்களோடு மக்களாய் வாழ்ந்து அரசியல் விடையத்திலும்சரி, அபிவிருத்தி விடையத்திலும்சரி மக்களுக்கான தன்னால் இயன்ற சேவையை வழங்கிய ஒரு சிறந்த மனிதர். அவருடைய இழப்பானது எமது மக்களுக்கு பேரிழப்பாகும். என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கின் சிறந்த அரசியல் தலைமையின் மறைவு பெரும் பேரிழப்பாகும்

### கிழக்கு மாகாண முன்னாள் ஆளுனர் இரங்கல்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிழக்கின்ஒருதலைசிறந்தஅரசியல்வாதியை நாம் இழந்துள்ளோம் என முன்னால் கிழக்கு மாகாண ஆளுனரும் ,முன்னால் வெளிவிவகார அமைச்சருமான ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார். முன்னால் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் க. துரைரட்ணசிங்கம் அவர்களின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்தின் அன்றைய முதல் வருகையின் போது ஒன்றாக என்னுடன் பயணித்த ஒரு சிறந்த மனிதர் .இவரது ஆத்மா சாந்தியடையவும் இவரது குடும்பத்தாருக்கு உள அமைதியை பெறவும் வேண்டுகிறேன் இவரது மறைவு குறித்து கவலயடைகிறேன் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கிறேன்.

இவர் தமிழ் மக்களுக்கான பிரதிநிதியல்லாமல் முழு சமூகத்துக்காகவும் ஒன்றினைந்து செயற்பட்டவர் கிழக்கு ஆளுனராக இருந்த போதும் என்னுடன் உள்ள உறவு மறக்க முடியாது கிழக்கு மக்கள் மத்தியில் சமூகம்சார் பிரச்சினை தொடர்பிலும் முன்வைத்து சிறந்த அரசியல் தலைமைத்துவத்துக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தவர் என்றும் தனது அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

## 'மனித நேயமிக்க மக்கள் பிரதிநிதி ஒருவரை இழந்து விட்டோம்'

(பைஷல் இஸ்மாயில்)

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.துரைரத்னசிங்கம் அவர்களின் இறப்பின் மூலம் மனித நேயமிக்க மக்கள் பிரதிநிதி ஒருவரை நாம் இழந்து விட்டோம் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

துரைரத்னசிங்கம் கல்வி அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இதன் மூலம் கல்விச் சமுகத்தின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். அவரிடம் மனிதாபிமானமே மேலோங்கியிருந்தது. இதனால் இன, மத பேதமற்ற செயற்பாடுகளை அவர் முன்னெடுத்து வந்தார்.

எனக்குத் தெரிந்த வரை பல முஸ்லிம் அன்பர்கள் அவருக்கு இருந்தார்கள். அவர்களோடு மிகவும் அன்பாகப் பழகி வந்தார். குடும்ப உறவினர் போல அவர்களது சுக துக்கங்களில் பங்கு பற்றி வந்ததை நான் அறிந்துள்ளேன். இன்றைய காலகட்டத்தில் இவரைப் போன்ற நல்ல பண்புள்ளவர்களை காண்பது அரிது.

அதிகாரமிக்க பதவிகளை அவர் வகித்து வந்தாலும் நல்ல பண்பும் பக்குவமும் அவரிடம் நிறைந்திருந்தது. இதனால் எல்லோரையும்



மனிதர்களாக அவர் பார்த்தார். அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அவரது பன்முகப் படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீடுகளில் பள்ளிவாயல் அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்கீடுகளை அவர் செய்திருந்தமையை நான் நன்கு அறிவேன்.

உயிரினங்களைப் பொறுத்த வரை இந்த உலகம். நிரந்தரமில்லாதது. ஒவ்வொருவருக்கும் பிரிவதற்கான நேரம் வரையறுக்கப் பட்டுள்ளது. அவரவருக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் நாம் போய்த் தான் ஆக வேண்டும். அந்த வகையில் துரைரத்னசிங்கம் அவர்கள் இப்போது எம்மை விட்டும் பிரிந்து சென்றுள்ளார். இவரைப் போல நாமும் ஒருநாள் பிரிந்து செல்வோம் என்பது உறுதி.

இவரது மறைவின் மூலம் மனித நேய மிக்க ஒருவரை நாம் இழந்துள்ளோம். இனவாதமும், மதவாதமும் போசிக்கப்பட்டு வரும் இன்றைய காலத்தில் இவரது இழப்பு கவலையைத் தருகின்றது. இவரது மறைவின் மூலம் பெருங் கவலையடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு இறைவன் ஆறுதலைக் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன் என அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




யாழ்ப்பாணத்தில் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் கதிர்காமத்தம்பி துரைரட்ணசிங்கத்தின் அஞ்சலி நிகழ்வு

## தமிழ் தேசியத்தின் பேரிழப்பு!



காரைதீவு நிருபர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் காலமான செய்தி எம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என த.தே.கூட்மைப்பின் காரைதீவு பிரதேசசபையின் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தனது அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களுக்கு உதவி புரிந்தது தமிழ்தேசிய பாதையிலே விமர்சனத்துக்கு அஞ்சாது மிரட்டலுக்கு அடிபணியாத சாதாரண மானவர்களைப் போன்று பழகுகின்ற ஐயா அவர்களுடைய இழப்பு தமிழ் தேசியத்தின் பேரிழப்பு.

அமைதியான அடக்கமான ஒரு பண்புமிக்க நல்ல மனிதர். தேசிய பட்டியல் மூலம் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசியல் ஆசான்.

இந்த ஒரு சூழ்நிலையில் அவரின் இழப்பு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று தான்.

# ஆலய நிருவாகிகளுடன் மாத்திரம் நடைபெற்ற கண்ணகை அம்மனின் வைகாசி சடங்கு







**காரைதீவு நிருபர்**

அன்ரிஜன் சோதனை செய்யப்பட்ட ஆலயநிருவாகிகள் மற்றும் சடங்கு நடாத்துபவர்கள் பத்துப்பேர் மாத்திரம் கலந்துகொண்ட கடல்தீர்த்தம் கொணர்ந்து கல்யாணக்கால் முறித்து ஆலயத்தில் நடும் முதல் நாள் நிகழ்வு நேற்று நடந்தேறியது.

இந்நிகழ்வு வரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திச்சடங்கில் வரலாற்றில் முதல்தடவையாக அன்ரிஜன் சோதனையின்பின்னர் நேற்று முன்தினம் திங்கள் மாலை இடம்பெற்றது.

ஆலய தர்ம கர்த்தாக்களுள் ஒருவரான இரா.குணசிங்கம் தலைமையிலான கப்புகன் கங்காணி உள்ளிட்ட இந்தப்பத்து பேர் கொண்ட குழுவினர் மாத்திரமே சுகாதாரவிதிமுறைகளுக்கிணங்க முகக்கவசமணிந்து கடலுக்குச்சென்று கடல் தீர்த்தம் கொணர்ந்து கல்யாணக்கால் முறித்து ஆலயத்தில் கூறை அணிவித்து நட்டனர்.

கொரோனா தாக்கத்தால் இம்முறை பக்தர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் .அத்துடன் நேர்த்திகளுக்கும் அனுமதியில்லை என்று ஏலவே அறிவிக்கப்பட்டகாரணத்தினால் பக்தர்கள் கலந்துகொள்ளவில்லை.

வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டிதொட்டியெல்லாம் பறையொலிச் சத்தமும் குழலோசையும் கேட்கும்.'வைகாசிப்பொங்கல்'எனும் பாரம்பரிய சடங்கு உணர்வுபூர்வமாக பயபக்தியுடன் இடம்பெறும்.

அந்தவகையில் இலங்கையில் வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனாலய வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு திங்கள் மாலை திருக்கதவுதிறந்து கல்யாணக்கால் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய் அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையவிருக்கிறது.

அண்மைக்காலமாக கொரோனா தீநுண்மியின் தாக்கம் படுவேகமாக அதிகரித்துவருவதனால் பாரம்பரிய சடங்கு என்பதால் அதை கிரமமாக அனைத்து சம்பிரதாயங்களையும் செய்வதற்கு ஆலயநிருவாகிகள் பத்துப்பேருக்கு மட்டுமே வழமைபோல பாரம்பரிய சடங்கு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்களும் அன்ரிஜன் செய்யப்பட்டு சடங்கு காலத்தில் ஆலயத்தில் பூரணமாகத் தங்கியிருந்து அதனைச்செய்யவேண்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கற்பூரச்சட்டி ஏந்துதல் அங்கப்பிரதட்சணம் செய்தல் காவடி எடுத்தல் முதலான சகல நேர்த்திகள் செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

கடைகளுக்கும் ஏனைய ஊர்வலம் மற்றும் வெளிவிடயங்களுக்கும் தடை செய்யப்பட்டுள்ளது.பக்தர்கள் வீட்டிலிருந்தவாறே அம்மனை வணங்கலாம் எனக்கூறப்பட்டுள்ளது.

## தொடர்ந்தும் முதலிடத்தில் கல்முனை ஸாஹிரா

**( எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் இருந்து 79 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதி பெற்றுள்ளதாக கல்லூரியின் அதிபர் எம்.ஐ. ஜாபிர் தெரிவித்தார்.

புதிய பாடத்திட்டத்தில் இருந்து 65 பேரும், பழைய பாடத்திட்டத்தில் இருந்து 14 பேரும் என 79 மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைவதற்க்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு (2019, 2020) ஆண்டுகளாக உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினை கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டு வருவதாகவும், உயர்தரத்தில் 3 பிரிவுகளிலும் உள்ள 6 பாடத்துறைகளில் மாவட்ட மட்டத்தில் முதல் 10 இடங்களுக்குள் இப்பாடசாலை அதிகம் இடம்பிடித்திருப்பது இக் கல்லூரியின் மற்றுமொரு சாதனையாகும் என அதிபர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், மற்றும் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், உதவி பகுதித்தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் இதனோடு சம்பந்தப்பட்ட பாடசாலையின் நலன்விரும்பிகள் அனைவருக்கும் பாடசாலையின் அதிபர் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

## காரைதீவில் 30 அன்ரிஜன் 3பி.சி.ஆர்; அனைத்தும் நெகடிவ்



**(காரைதீவு நிருபர்)**

காரைதீவில் மேற்கொள்ளப்பட்ட அண்டிஜென் பரிசோதனையின் பெறுபேறுகள் அனைத்தும் நெகட்டிவ் பெறுபேற்றை தந்துள்ளது என காரைதீவு தலைமை பொதுச் சுகாதார பரிசோதகர் சா.வேல்முருகு தெரிவித்தார்.

காரைதீவு கண்ணகை அம்மனாலய நிருவாகிகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளில் ஈடுபடும் தொழிலாளிகள் உள்ளிட்ட 30பேருக்கு அன்ரிஜன் சொதனை செய்யப்பட்டது. அனைவருக்கும் நெகடிவ் பெறுபேறு கிடைத்துள்ளது. இதைவிட மேலும் மூவருக்கு பிசிஆர் சோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ சுகுணனின் வேண்டுகோளுக்கிணங்க காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பொது சுகாதார பரிசோதகர் அபிவிருத்தி உத்தியோகத்தர் இணைந்து மேற்கொள்ளப்பட்ட அண்டிஜென் பரிசோதனை அனைத்தும் நெகட்டிவ் பொறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

## வைத்தியர் கோஸ்தா தனது கருத்தை வாபஸ் பெறாவிட்டால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

### இம்ரான் எம்.பி

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

வைத்தியர் கொஸ்தா தனது கருத்தை வாபஸ் பெற வேண்டும் இன்றேல் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கிண்ணியாவில் தற்போது கொவிட் தொற்று வேகமாக பரவி வருவதால் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிவுக்கு உட்பட்ட 10 கிராமசேவகர் பிரிவுகளும் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிவுக்கு உட்பட்ட 2 கிராமசேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டுள்ளன.

முக்கியமாக இந்த மூன்றாம் அலையில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 170 தொற்றாளர்களும் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 58 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் மூன்றாம் அலையில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 மரணங்களும் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

ஆகவே அதிகமாக பாதிப்படைந்துள்ள கிண்ணியா பகுதியில் பின்வரும் விடயங்கள் உடனடியாக செய்யப்பட வேண்டும்.

தனிமைப்படுத்தல் நிலையம் அவசரமாக அமைக்கப்பட வேண்டும்.கொரோனா குழுவால் பல இடங்கள் சிபாரிசு செய்த போதும் இதுவரை தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்கப்படவில்லை.

இங்கு அதிகமான மரணங்கள் நிகழ்வதால் கிண்ணியாவில் அடக்கம் செய்ய இடம் ஒதுக்கப்பட வேண்டும்.பொருத்தமான இடமாக மஹரூப் கிராம மையவாடி அடையாளப்படுத்தப்பட்டு மாவட்ட செயலகத்தால் பரிந்துரை செய்யப்பட்ட போதும் இதுவரை இதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

மரணித்த உடல்களை அடக்கம் செய்ய கொழும்பில் இருந்து அனுமதி வர தாமதமானதால் உடல்களை அடக்கம் செய்வதிலும் தாமதம் ஏற்படுகிறது.ஆகவே அடக்கம் செய்வதுக்குரிய அனுமதியை விரைவாக சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும்.

கிண்ணியா பிரதேசத்தில் பிறந்தவனாக இச்சபையில் நான் ஒரு விடயத்தை பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளேன்.

கிண்ணியாவில் இறந்த கொரோனா நோயாளிகள் இரகசியமாக அடக்கம் செய்யப்படுகின்றார்கள் என திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டி.ஜீ.எம். கொஸ்தா தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளது

கிண்ணியாவில் பொலிஸார் கடமையில் உள்ளனர். அதேபோல பாதுகாப்புப் படையினரும் கடமையில் உள்ளனர். சகல இறப்புகளும் உரிய முறைப்படி பொலிசுக்கு அறிவிக்கப்பட்டு உரிய விசாரணைகளின் பின்பே அடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

இந்நிலையில் இவரின் பொறுப்பற்ற கருத்தை மிக வன்மையாக கண்டிக்கிறேன்

பொலிசார், பாதுகாப்பு படையினர், சுகாதர வைத்திய அதிகாரி கொரோனல் களை தாண்டி எவ்வாறு இரகசியமாக அடக்கம் செய்ய முடியும்.

இவர் இக்கருத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் இல்லாவிடின் இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

## மூதூர் தளவைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பிலான கலந்துரையாடல்



**(எப்.முபாரக்)**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் தள வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரலவின் தலைமையின் மூதூர் வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இதன் போது மூதூர் தளவைத்தியசாலை அபிவிருத்திகள், கொரோனா சூழ்நிலைமை மற்றும் கொரோனா கட்டுப்பாடுக்கான முன் ஆயத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் பொதுஜன பெரமுன கட்சியின் மூதூர் தொகுதி அமைப்பாளர் எம்.எஸ்.எம்.முபாரக்,அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிக்கோரல மற்றும் மூதூர் வைத்தியசாலை பணிப்பாளர் கயல்விழி உட்பட பாதுகாப்பு தரப்பினரும் கலந்து கொண்டார்கள்.

இதன் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது. 20 சிலிண்டர்களை பாராளுமன்ற உறுப்பினர் ஊடாக பெறுவதற்கு நடவடிக்கை,கொரனா வைரசினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர சிகிச்சைக்காக வேண்டி மருந்துகள் பெற அனுமதி, மேலதிகமாக தேவைப்படும் கட்டில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன,

ஆளனி பற்றாக்குறைக்கு அவசரமாக சீர் செய்யப்படும், எதிர்கால அபிவிருத்தி தொடர்பான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## மன்னாரில் ஏ 14 வீதி அபிவிருத்தி திட்டத்தில் இடையூறாக இருக்கும் மதில்கள் அகற்றப்பட்டு திட்டம் முன்னெடுக்கப்படும்

### மாவட்ட செயலக கூட்டத்தில் தீர்மானம்

**(வாஸ் கூஞ்ஞ)**

'ஐ' அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மன்னார் தலைமன்னார் வரைக்கான வீதி அபிவிருத்தி திட்டம் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மன்னார் நகருக்குள் சின்னக்கடை பகுதியில் இடையூறாக இருக்கும் கட்டடிட மதில்களால் இந் பகுதியில் இவ் வீதியை சரியான முறையில் முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் மதில்கள் அகற்றப்படும்போது பாதிப்டையும் மக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இவ் திட்ட பிரமாணத்துக்கமைய இவ் வீதியின் அபிவிருத்தி வேலை ஒரு மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.



தலைமன்னார் மதவாச்சி ஏ14 பிரதான வீதியானது 'ஐ' அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தற்பொழுது மன்னாரிலிருந்து தலைமன்னார் வரையான வீதியின் அபிவிருத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மன்னார் நகரில் எச்எம்பி வங்கியிலிருந்து மன்னார் நகர விளையாட்டு மைதானம் வரைக்குமான இவ் இடத்தில் வீதிக்கு அருகாமையில் வீடுகள், மதில்கள் அமைக்கப்பட்டுள்ளமையால் இவ்விடத்தில் வீதியானது ஒடுக்கமாக காணப்படுகின்றது.

ஆகவே இவ் வீதியை அகலப்படுத்தி பாதுகாப்பான முறையில் இவ் வீதியில் மக்கள் நடமாடுவதற்கேற்றவாறு செப்பணிடுமாறு மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க நேற்று திங்கள்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் ஒரு விஷேட கூட்டம் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்றது.

இவ் கூட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் றொயிஸ் குரூஸ் இவர்களுடன் ஏனைய திணைக்கள தலைவர்களுடன் இவ் வீதியை அகலப்படுத்தும் போது அதில் பாதிப்புக்கு உள்ளாகப்போகும் மக்களும் கலந்து கொண்டனர்.

இதுவிடயமாக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவிக்கையில்;

இவ் கூட்டத்தின்போது இவ்விடத்தில் இவ்வீதியை அமைக்கும் போது மதில்கள் உடைக்கப்படும் போது அவர்களுக்கு அவ்விடத்தில் மதில்கள் அமைத்துக் கொடுக்கும் தேவைபாடுகள் காணப்பட்டுள்ளது எனவும் ஆகவே இது சம்பந்தமாக பாதிப்படைவோருடன் கலந்துரையாடி ஒரு மாதத்துக்குள் மதில்கள் அகற்றப்பட்டு அவைகள் மீளக் கட்டடப்பட்டு புனரமைக்கப்பட இருக்கும் வீதிக்குரிய அளவு பிரமாணத்தை ஏற்படுத்தி தருவதற்காக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மன்னார் பிரதேச செயலாளரையும் இணைத்து ஒரு குழுவினரை நாங்கள் அமைத்துள்ளோம் எனவும்.

இக்குழு சரியான வழிமுறைகளை ஏற்படுத்தி அறிக்கையொன்றை எம்மிடம் சமர்பித்தது டன் நாங்கள் இவ் வீதி திட்டத்தில் ஈடுபடும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியபின் இவ் திட்டத்தை தொடர்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது என இவ்வாறு அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.